**தலைப்பு 208 – தேசிய நூதனசாலைகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொழிப்பறிக்கை 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 யூலை 30 ஆந் திகதி சேவையினை விட்டுச் சென்ற ஊழியர்களின் 2020 திசெம்பர் 31 இல் தீர்க்கப்படாத கடன் மீதி ரூபா 50,741 இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களின் கடன் மீதியாக குறிப்பிடப்பட்டிருந்தது. | காலதாமதத்தினால் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது. | இணக்கக் கூற்றினுள் சரியாக வகைப்படுத்தப்பட்டு நிலுவைக் கடன் தொகை குறிப்பிடப்பட வேண்டும். |

**(ஆ) ஆதன பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு காணிகள் மற்றும் கட்டிடங்கள் முறையே ரூபா 10,000,000,000 வும் மற்றும் ரூபா 800,000,000 ஆக கிரயம் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. இந்த சொத்துக்களின் கிரயம் மதிப்பிடப்பட்டு 07 வருடங்களை விட அதிக காலம் கடந்திருந்தும் அந்த சொத்துக்கள் மீள் மதிப்பிடப்பட்டு சரியான பெறுமதியை கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அரச கணக்கீட்டுத் திணைக்களத்தின் ஊடாக கோரப்பட்டு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கையை மேற்கொள்வேன். | ஆதன மதிப்பீட்டுப் பெறுமதிகள் பழைமையானது என்பதுடன் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகயின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) **நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச்6 சுற்றறிக்கை / நிதிப் பிரமாணம் 502(2) பிரகாரம் ii ஆம் அனுபந்தத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நாளதுவரை யாக்கப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்குவ தற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை / நிதிப் பிரமாணம் 502(2) பிரகாரம் ii ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்கு உரிய வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | **பிணைப் பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடக்கப்படும் வகையில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (iii) | **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | நிதிப் பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச கட்டிடங்கள் அனைத்திலுமுள்ள மின்சார உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பதிவேட்டுப் புத்தகமொன்று பேணப்பட வேண்டும். |
| (iv) | **கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு** | | |
| | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி மற்றும் 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 04 ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக் காட்டப்பட்டவாறு தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் அறிவுரைகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

(ஈ) **கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தினால் அரச வங்கியொன்றில் பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கை பயன்படுத்தி 2016 திசெம்பர் 31 இல் ரூபா 1,856,987 கூட்டுமொத்தப் பெறுமதியான காசோலையொன்று தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த காசோலை வழங்கப்பட்டு 14 மாத கால தாமதத்தின் பின்னர் 2018 மார்ச் 02 ஆந் திகதி காசோலை மறுக்கப்பட்டிருந்தது. காசோலை நீண்டகால தாமதத்தின் பின்னர் மாற்றப்பட்டது தொடர்பான பரிசீலனைக்கு தேவையான எழுத்து மூல விளக்கங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வினால் வேண்டப்படுகின்ற தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | டோனர், பெக்ஸ் ரோல் மற்றும் பிரின்டர் மாஸ்டரோல் உள்ளடங்கலாக 04 வகையான பொருட் தொகையை பாவனைக்குட்படுத்தாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த துடன், அந்த பொருட் தொகை கொள்வனவு செய்யப்பட்ட திகதி மற்றும் பெறுமதிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பாவனைக்கு உட்படுத்துவதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. | மொத்த முகாமைத்துவத்திற்கு உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**(உ) கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்க வேண்டிய சான்றிதழ்**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டுமெனினும் அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை ஆக்கபூர்வமாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயினும் அம்மீளாய்வை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஊ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை**

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | | |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய ஏற்பாட்டு | 2021 ஆம் ஆண்டுத் திட்டம் சரியாக 2/2020 சுற்று நிருபத்தின் | 2020 செயல் நடவடிக்கைத் திட்டம் சுற்றுநிருப அறிவுரையின் |

| | | |
|---|---|---|
| வியூகம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், கட்டுநிதித் தேவைப்பாட்டின் திட்டம், பாதீட்டு பதிவேடுகள் பெறுகைத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் போன்றவை செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பிரகாரம் தயாரிக்கப் பட்டுள்ளது. | பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும் |

**(எ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**அதிகார பலமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 ஆந் திகதியிலிருந்து 2021 ஆம் ஆண்டு யூலை 31 ஆந் திகதி வரை 10 வருட கால எல்லைக்கு குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்றை கைத்தொழில் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை திணைக்களத்தின் அனுதியின்றி சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், திணைக்களத்தின் இணக்கப்பாடின்றி அந்த குத்தைகக் கால எல்லையை 35 வருடங்கள் வரைக்கும் நீடிப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்திற்கான வீதவரிக் கட்டணம், நீர்க் கட்டணம் போன்ற செலவுகள் திணைக்களத்தினால் | நிறுவனம் நீண்டதொரு விடயத் தெளிவை மேற்கொண்டது. இது தொடர்பாக தேடிப்பார்த்து நடவடிக்கை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | கட்டிடத்திற்குரிய அறவிடப்பட வேண்டிய வாடகையை அறவிடுவதற்கும் கட்டிடத்தை பாதுகாத்து துரிதமாக ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் திணைகளத்திற்கு கிடைக்கப் பெற வேண்டிய முழு நிலுவை குத்தகை வாடகையின் மொத்தப் பெறுமதி ரூபா 66,194,051 ஆகும். இந்த நிலுவை வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கும் திணைக்களத்திற்கு உரித்தான சொத்துக்களை முகாமைத்துவம் செய்து பாதுகாத்துக் கொள்வதற்கும் மற்றும் இந்த முறையற்ற கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவு விடயம் 01 இன் திருத்திய மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டில் நூற்றில் 78 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | 2020 நவம்பர் திருத்திய மதிப்பீடில் ரூபா 06 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. ஒரு மாத காலத்திற்குள் அந்த ஏற்பாட்டை செலவிட முடியாது போயுள்ளது. | மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டை உபயோகப்படுத்தி உரிய விடயங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிலே 02 மூலதன வேலைத்திட்டங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த மூலதன ஏற்பாடுகளில் முறையே நூற்றுக்கு 42 சதவீதம் மற்றும் நூற்றுக்கு 32 சதவீதம் வருட இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. | ஆரம்ப வேலைகளுக்குரிய நடவடிக்கைகள் பொறியியல் விடயங்கள் தொடர்பான மத்திய அறிவுரைகள் விடயப் பணியகத்தின் ஊடாக நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாது போனதால் இந்த ஏற்பாட்டை செலவிட முடியாது போயுள்ளது. | பெறப்பட்ட ஏற்பாடுகள் உரிய மூலதன செயற் திட்டங்களுக்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும். |

## 2.2 வங்கிக் கணக்குச் செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வங்கியில் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த 06 மாதங்களை விட அதிக கூட்டு மொத்த ரூபா 354,314 பெறுமதியான 21 காசோலைகள் தொடர்பாக 396(ஈ) நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த காசோலைகளின் திகதிகளை நீடித்துக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டிற்கான திட்டங்களை தயாரிக்கும் போது ஒட்டுமொத்த கிரயமும் அந்தந்த வேலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வேறுபடுத்தாமையும், இலக்கை அண்மிப்பதை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமையும், வேலைகள நிறைவேற்றப்படும் போது முன்னேற்றத்தைக் காட்டுகின்ற திரட்டப்பட்ட செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பிக்காததன் காரணமாக திட்டங்கள் நிறைவேற்றப்படுவதன் முன்னேற்றத்தை அவதானிப்பதற்கும் முடியாது போனது. | விடையளிக்கப் பட்டிருக்கவில்லை. | முன்னேற்றத்தை பரிசீலிக்கும் வகையில் திட்டங்களையும் செயலாற்றல் அறிக்கையையும் தயாரித்துக் கொள்ள வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் தீயணைப்பு பாதுகாப்பு முறைமையை ஸ்தாபிப்பதற்குரிய நீர்த் தாங்கியை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் வரி தவிர்ந்த திட்டமிடப்பட்ட பெறுமதி ரூபா 18,676,148 ஆகும். இந்த செயற்திட்டத்திற்காக 2016 செப்தெம்பர் 26 ஆந் திகதி உடன்படிக்கையொன்றுக்கு எட்டப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 26 ஆந் திகதி வேலைகள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த இந்த நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் 2020 ஆம் வருட இறுதியிலும் நூற்றுக்கு 40 வீதமாகும். | ஏற்றுக் கொள்கின்றேன். | காலதாமதமான செயற்திட்டத்தினை திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுனுபுர உரும நூதனசாலையின் கேட்போர் கூடத்தினுடனான அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்ட கிரயம் ரூபா 22,509,349 ஆன செயற்திட்டமொன்றிற்காக 2015 நவம்பர் 30 ஆந் திகதி உடன்படிக்கையொன்று எட்டப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வேலைகள் நிறைவு செய்யப்படுவதற்கிருந்த இந்த செயற்திட்டத்திற்காக மொத்தமாக ரூபா 18.09 மில்லியன் கொடுப்பனவுகள் | ஏற்றுக் கொள்கின்றேன். | காலதாமதமான செயற்திட்டத்தினை திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த துடன், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | ஒலன்த நூதனசாலையின் பாதுகாப்பு மற்றும் திருத்த வேலைகளுக்காக மொத்தம் ரூபா 97,259,127 விலான கிரய மதிப்பிடலொன்றின் மூலம் 2019 ஆம் ஆண்டில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையொன்றிற்கு எட்டப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் பாதீட்டு ஏற்பாட்டை உபயோகப்படுத்தி 2020 மே 01 ஆந் திகதி வேலைகளை நிறைவு செய்வதற்கு இருந்த வேலைகளுக்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இந்த வேலைகளுக்காக 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தமாக ரூபா 30,001,964 (வெட் உடனான) கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆகும் போதும் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | காலதாமதமான செயற்திட்டத்தினை திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தேசிய நூதனசாலையின் விலங்கியல் விஞ்ஞானப் பிரிவின் நகருயிர் ஈருடக வாழிகள் மற்றும் மீன் மனையை நவீனமயப்படுத்தலுக்கான ஒப்பந்தத்திற்காக மொத்தம் ரூபா 3,321,300 க்கு தனியார் நிர்மாண நிறுவனமொன்றிற்கு 2019 ஒக்டோபர் 01 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. | தற்போது வேலைகள் நிறைவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | காலதாமதமான செயற்திட்டத்தினை திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

2020 திசெம்பர் 15 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த இந்த நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்குரிய ஒப்பந்தம் 2021 மார்ச் மாதம் வரையிலும் நிறைவு செய்ததற்கான சான்றுறுதிகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிறுவனமொன்றினால் குறைந்தளவு மூன்று வருட காலத்திற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பெறுகைகள் நடவடிக்கைகளை பிரதான பெறுகைகள் திட்டத்தில் அட்டணைப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமெனினும், திணைக்களம் அதற்கு அனுகூலமாக பெறுகைகள் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் திட்டங்களை தயாரிக்கும் போது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) கொழும்பு தேசிய நூதனசாலை அமைந்துள்ள 4.6317 ஹெக்டேயர் காணி மற்றும் ஏனைய பிரதேசங்களில் அமைந்துள்ள 07 நூதனசாலைகளின் காணிகளின் உரிமையை திணைக்களத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு | விடையளிக்கப் பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு உரிய காணிகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பல்வேறு அரச நிறுவனங்களுடனான கடித பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் 2021 மார்ச் மாதம் வரையும் அந்த காணிகளை சுவீகரித்துக் கொள்வதற்கு முடியாது போயுள்ளது. | | |
| (ii) | திணைக்களத்தின் நூதனசாலையினுள் கண்காட்சிக்காக காணப்படுகின்ற நூதன பொருட்களுக்கு பௌதீக கணக்கெடுப்பொன்றை மேற்கொண்டு அந்த அறிக்கையை கணக்காய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அந்த பொருட்கள் 2018 ஆம் ஆண்டிற்கு பின்னர் கணக்கெடுப்பை மேற்கொண்டு இறுதி அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | கண்காட்சி பொருட்களை கணக்கெடுப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.5 நட்டம் மற்றும் சேதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆந் திகதி இடம்பெற்ற நூதனப் பொருட்கள் காணாமல் போனது தொடர்பாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடொன்றின் பிரகாரம் அந்தப் பொருட்களின் பெறுமதி ஏறக்குறைய ரூபா 48 இலட்சமாகும். வழக்கு நடவடிக்கைகள் நிறைவடையாததன் காரணமாக இந்த நூதனப் பொருட்களை திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளதுடன் அதன் பிரகாரம் தொலைந்து போன பொருட்கள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட பொருட்களுக்கிடையில் பொருள் பற்றாக்குறை மற்றும் அதன் | விடையளிக்கப் பட்டிருக்கவில்லை. | இந்த நூதனப் பொருட்களை பாதுகாத்தல், அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்ளல் மற்றும் குறைவாக உள்ள பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

பெறுமதியை அறிந்து கொள்வதற்கும் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் திணைக்களத்திற்கு முடியாது போயிருந்தது. இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் சேயையிலிருந்து விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முழு கடன் தொகை ரூபா 1,131,500 ஆகும். 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் வழிகாட்டல் கோவை இலக்கம் 1(உ) ஆம் பந்தியின் பிரகாரம் காலாவதியான கடன்களை அறவிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | காலாவதியான கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலுவைக் கடன் மீதிகளை சுற்றுநிருபத்தின் அறிவுரைகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட 47 வகையான பதவிகளுக்குரிய 137 வெற்றிடங்கள் நிலவியதுடன் அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கைகளுக்குமிடையில் நூற்றுக்கு 29 சதவீதமான ஊழியர் பற்றாக்குறையொன்று நிலவியது. இந்த ஊழியர் பற்றாக்குறையை நிரப்புவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | விடையளிக்கப் பட்டிருக்கவில்லை. | ஊழியர் பற்றாக்குறைகளை நிரப்பி நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்காக செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |